வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. மனிகிறாம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : eelanaduweekly@gmail.com | மலர் : 07 | 29.01.2026 வியாழக்கிழமை | இதழ் : 29 | பக்கங்கள் : 08

# ரணிலுக்கு எதிரான விசாரணை ஒரு மாதத்துக்குள் நிறைவுறும்!

## சட்ட மா அதிபர் தகவல்

●மேல் நீதிமன்றில் மார்ச்சில் வழக்கு தாக்கல்



கொழும்பு, ஜன. 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான விசாரணைகளை ஒரு மாத காலத்துக்குள் நிறைவு செய்து மார்ச் மாதத்தில் அவருக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்படும் என்று சட்ட மா அதிபர் அறிவித்துள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரச நிதியை தவறாக பயன்படுத்தியமை தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் விசாரணைக்கு எடுத்தது. இதன்போது, சட்ட மா அதிபர் தலைமையில் முன்னிலையான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் திலீப பீரிஸ் இந்தத் தகவலை நீதிமன்றத்துக்கு தெரிவித்தார்.

இந்த வழக்கில் நேற்றைய தினம் ரணில் விக்கிரமசிங்க நீதிமன்றில் முற்பட்டிருந்தார்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக பதவி

07

## ரணிலின் முன்னாள் செயலர் சமனுக்கு விளக்கமறியல்

கொழும்பு, ஜன. 29

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவை எதிர்வரும் பெப்ரவரி 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் பொதுச் சொத்து சட்டத்தின் கீழ் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிரான வழக்கு நீதிமன்றில் விசாரணைக்கு வந்தது. இதன்போதே இந்த வழக்கில் இரண்டாவது சந்தேகநபரான சமன் ஏக்கநாயக்கவுக்கு மேற்படி உத்தரவை நீதிமன்றம் பிறப்பித்தது.

முன்னதாக இந்த வழக்கு தொடர்பாக குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் சமன் ஏக்கநாயக்கவை கைது செய்ய அவரின் வீட்டுக்கு சென்றிருந்தனர். ஆனால், அவர் தலைமறைவாகியிருந்தார் என்று கூறப்படுகிறது. இந்த நிலையில் சமன் ஏக்கநாயக்க நேற்றைய தினம் நீதிமன்றில் முற்பட்டார். இதன்போதே அவரை விளக்கமறியலில் வைக்க கொழும்பு நீதிவான் இசுரு நெத்திகுமார உத்தரவிட்டிருந்தார்.

(ஐ)

## டித்வா பேரிடர் தாக்கத்தால் பொருளாதாரம் பாதிக்காது

### மத்திய வங்கி ஆளுநர்

கொழும்பு, ஜன. 29

டித்வா பேரிடரால் நாட்டின் பொருளாதாரத்துக்கு அதிர்ச்சி ஏற்படுத்தப்பட்டது. எனினும் இது, இந்த ஆண்டில் பொருளாதார வளர்ச்சியை பாதிக்காது என்று மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

நடப்பு ஆண்டின் முதலாவது நாணயக் கொள்கை மீளாய்வு தொடர்பில் நேற்றைய தினம் கொழும்பில் நடத்திய ஊடக

07

## இரு நாட்களில் தீர்வில்லையேல் போராட்டம் தீவிரப்படுத்தப்படும்

### அரச மருத்துவ அதிகாரிகள் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 29

அரச மருத்துவர்களின் பிரச்னைகளுக்கு உரிய தீர்வுகள் எட்டப்படாவிட்டால் அடுத்த 48 மணி நேரத்தின் பின்னர் தொழில் சங்க போராட்டங்கள் மேலும் தீவிரப்படுத்தப்படும் - இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

சங்கத்தின் மத்திய செயற்குழு நேற்றைய தினம் கூடியது. இதன்போது, தற்போதைய நிலைமகள் தொடர்பில் ஆராயப்பட்டது.

07

## எந்தப் பிள்ளையும் கல்வியில் புறக்கணிக்கப்படக்கூடாது!

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

கொழும்பு, ஜன. 29

எந்தவொரு பிள்ளையினதும் கல்வி அவர்களது பெற்றோரின் பொருளாதார நிலைமையைப் பொறுத்து தீர்மானிக்கப்படக்கூடாது. எந்தவொரு பிள்ளையும் கல்வியிலிருந்து புறக்கணிக்கப்படக்கூடாது என்பதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பு என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

புதிய கல்விச் சீர்திருத்தங்களின் கீழ் முதலாம் தரத்துக்கு நுழையும் அனைத்து

07

## ஐ. எம். எவ்.வின் கடன் திட்டம் மாற்றமின்றி தொடர முடிவு!

### நேற்றைய சந்திப்பில் இணக்கம்



கொழும்பு, ஜன. 29

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்ட உடன்படிக்கையில் எந்தவித மாற்றங்களுமின்றி தொடர்ச்சியாக

07

## நம்பிக்கையில்லா பிரேரணைகள் உரியநேரம் கொண்டுவரப்படும்!

### ஐக்கிய மக்கள் சக்தி தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 29

"சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவருவது குறித்து ஆராயப்பட்டு வருகிறது. பிரதமருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையும் உரிய நேரத்தில் வரும்." - இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நம்பிக்கையில்லா

07

## ஒட்டுசுட்டானில் ஒருவர் தாக்கப்பட்டு படுகொலை

முல்லைத்தீவு, ஜன. 29

தலையின் பின்புறத்தில் காயத்துடன் குடும்பஸ்தர் ஒருவர் ஒட்டுசுட்டானில் சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த நபர் சைக்கிளில் சென்று கொண்டிருந்த போது அடித்துக் கொல்லப்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் - கரடிப்புலவு கிராமத்தில் நேற்று முன்தினம் இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

07

## கிவுல் ஓயா திட்டத்தை எதிர்த்து திங்கட்கிழமை போராட்டம்!

வவுனியா, ஜன. 29

தமிழ் மக்களின் பூர்வீக நிலங்களை ஆக்கிரமிக்கும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக எதிர்வரும் திங்கட்கிழமை போராட்டம் நடைபெறவுள்ளது.

வவுனியா - நெடுங்கேணி பேருந்து நிலையத்துக்கு முன்பாக இந்தப் போராட்டத்தை முன்னெடுக்க வவுனியா வடக்கு பொது அமைப்புகள், தமிழ் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகள் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளனர்.

07

## புகையிலை, மதுபானத்தால் ரூ. 24 ஆயிரம் கோடி நட்டம்!

கொழும்பு, ஜன. 29

புகையிலை, மதுபான பயன்பாட்டால் நாட்டுக்கு ஆண்டுதோறும் 22 ஆயிரத்து 500 கோடி ரூபாய் முதல் 24 ஆயிரம் கோடி ரூபாய் வரை நட்டம் ஏற்படுகிறது. அத்துடன், வருடாந்தம் 22 ஆயிரம் பேர் உயிரிழக்கின்றனர் என்று புகையிலை -மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலைமையிலிருந்து மீள்வதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளை உள்ளடக்கி,

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிளிநொச்சி விபத்தில் 4 பேர் படுகாயம்

கிளிநொச்சி, ஜன. 29

மணலுடன் வந்த டிப்பரும் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்தும் மோதிய விபத்தில் நால்வர் படுகாயமடைந்தனர்.

கிளிநொச்சி நகரப் பகுதியில் கரடிப்போக்கு சந்திக்கு அண்மையாக இந்த விபத்து நேற்று இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்ற இ. போ. ச. பேருந்தும் முறிகண்டியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி மணலுடன் வந்த டிப்பரும் மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் பேருந்தில் பயணித்த பயணிகள் இருவரும் டிப்பர் சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்கள் கிளிநொச்சி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# பருத்தித்துறை பிரதேச சபையில் பிரஜா சக்திக்கு எதிராக தீர்மானம்

வடமராட்சி, ஜன. 29

பருத்தித்துறை பிரதேச சபையில் பிராஜா சக்திக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபையின் புதிய ஆண்டுக்கான அமர்வு தவிசாளர் உதயகுமார் யுகதீஸ் தலைமையில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது.

இதன்போது குறித்த அரசாங்கம் அறிமுகப்படுத்திய பிரஜா சக்தி திட்டத்துக்கு எதிராக பிரேரணை கொண்டுவரப்பட்டது. பிரேரணைக்கு ஆதரவாக 10 வாக்குகளும் எதிராக 4 வாக்குகளும் பதிவாகின. அத்துடன், ஐவர் நடுநிலை வகித்திருந்தனர். ஒருவர் சபை அமர்வில் கலந்துகொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-02-05-08)

# புதிய பயங்கரவாத சட்டம் எமது நாட்டுக்கு வேண்டாம்

## மன்னார் மீனவர் சமாசம் எதிர்ப்பு

மன்னார், ஜன. 29

பயங்கரவாதத்தில் இருந்து அரசாங்கத்தை பாதுகாப்பதற்கான சட்டமானது இலங்கை மக்களுக்கு பொருத்தமற்றது. பயங்கரவாத சட்டம் போன்றே இதுவும் நீக்கப்பட வேண்டும் - என்று மன்னார் மாவட்ட மீனவர் கூட்டுறவு சங்க சமாசத்தின் செயலாளர் என். எம். ஆலம் தெரிவித்துள்ளார்.

மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் பெண்கள் அமைப்பு நேற்றைய தினம் ஏற்பாடு செய்த ஊடக சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்த ஊடக சந்திப்பில் மன்னார் நேசக்கரம் பிரஜைகள் குழுவின் போசகர் அன்ரனி சங்கர் மற்றும் வளர்பிறை பெண்கள் அமைப்பின் தலைவி றீற்றா வசந்தி ஆகியோரும் பங்கேற்று கருத்துகளை வெளியிட்டிருந்தனர். (ஐ)

# கால்கோள் விழா

யாழ்ப்பாணம், ஜன. 29

ஊரெழு கணேச வித்தியாசாலையின் தரம் - 1 மாணவர்களுக்கான கால்கோல் விழா இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அதிபர் இ. ஜெயக்குமார் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஊரெழு கணேச வித்தியாசாலையின் ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி இராஜமனோகரி தம்பிமுத்து பிரதம விருந்தினராக பங்கேற்பார். சிறப்பு விருந்தினர்களாக பொ. றஞ்சன், ந. பரமசிவம், ந. சுந்தரேஸ்வரன் ஆகியோர் கலந்து கொள்வர். (ஐ)

# நலம் தரும் வேம்பு நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஜன. 29

"நலம் தரும் வேம்பு" நூல் வெளியீடு எதிர்வரும் திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு சுன்னாகம் பொதுநூலகத்தில் நடைபெறவுள்ளது.

சுந்தரமூர்த்தி புவனகுமார் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் அறிமுக உரையை ஓய்வுநிலை ஆங்கில மொழி கற்பித்தல் பேராசிரியர் ம. சரவணபவ ஐயர், நூல் மதிப்பீட்டுரையை எழுத்தாளர் வடகோவை வரதராஜன் ஆகியோர் ஆற்றுவர்.

வேம்பின் வரலாறு, பாரம்பரியம், தாவர பூச்சி கட்டுப்படுத்தியாக, உயிர் உரமாக, நிலையான மற்றும் மீளுருவாக்க விவசாயத்தில், மனித மற்றும் கால்நடை ஆரோக்கியத்தில் வேம்பின் பங்கு, வேம்பு பயிர்ச்செய்கை மற்றும் கிராமப்புற வாழ்வாதார மேம்பாடு, வேம்பிலிருந்து கிடைக்கும் ஆரோக்கிய உற்பத்திகள் மற்றும் புவி வெப்பமடைதலைக் குறைத்தல் மற்றும் கார்பன் கிரெடிட் ஆகியவற்றில் வேம்பின் பங்கு என்பன குறித்து இந்த நூலில் பல்வேறு விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளம் எழுத்தாளர்களின் படைப்பிலக்கிய அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், ஜன. 29

மாணவிகளான பேரின்பகுமார் ஆகவி, பேரின்பகுமார் ஆதுரி ஆகியோரின் "பாட்டொன்றைப் பாடுவோம்" சிறுவர் பாடல் தொகுப்பு மற்றும் "பிறந்தநாள் சட்டை" சிறுவர் கதை ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

தெல்லிப்பழை மகாஜன கல்லூரியின் பிரதான மண்டபத்தில் கலை, இலக்கிய செயல்பாட்டாளர் சோ. தேவராஜா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் ஆசியுரையை தெல்லிப்பழை மகாஜன கல்லூரி அதிபர் இ. புஷ்பரட்ணம், வெளியீட்டுரையை மக்கள் கலை இலக்கிய பேரவையின் செயலாளர் சபா. தனுஜன், நூல் அறிமுக உரைகளை ஸ்கந்தவரோதய கல்லூரி ஆசிரியர் சோ.சிவனேஸ்வரன், மகாஜன கல்லூரி ஆசிரியர் ந. தவசோதிநாதன் ஆகியோரும் ஆற்றுவர்.

இந்த நிகழ்வில் விசேட கலை நிகழ்வுகளாக நாடக ஆசிரியர் சிறீலேகா பேரின்பகுமாரின் எழுத்துருவில், அதிபர் க. பேரின்பகுமாரின் நெறியாள்கையில் காரைநகர் மெய்கண்டான் வித்தியாலய மாணவர்களின் "மணிப்பூனையார்" மற்றும் சிவன் சுதன் அவர்களின் எழுத்துருவில், இ. ரஜிந்தனின் நெறியாள்கையில் "அயலார் தீர்ப்பு" ஆகிய சிறுவர் நாடகங்களும், ஹரனின் எழுத்துருவில் "நாய் கடிக்கும் கவனம்" நகைச்சுவை நாடகமும் அரங்கேறவுள்ளன. (ஐ)

# 181 பெண் தலைமை குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன!

கிளிநொச்சி, ஜன. 29

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த 181 பெண் தலைமை குடும்பங்களுக்கு சுமார் ஒன்றரை கோடி ரூபாய் பெறுமதியில் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

சிங்கப்பூரை சேர்ந்த ரி. ரி. துரை குடும்பத்தினர், செல்வி சரசீஜா ராமன் ஆகியோரின் நிதிப்பங்களிப்பில் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் இ. ஜெயசேகரத்தின் ஏற்பாட்டில் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கான இந்த வாழ்வாதார உதவி வழங்கும் நிகழ்வு நேற்று கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி நிலையத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன், கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் சு. முரளிதரன், இ. ஜெயசேகரம் ஆகியோர் பங்கேற்றிநிருந்தனர்.

வடக்கில் வறுமை கோட்டுக்கு கீழ் வாழும் ஆயிரம் பெண் தலைமை குடும்பங்களுக்கு உதவும் நோக்கில் நடைமுறைப்படுத்தப்படும் இந்த வாழ்வாதார உதவி திட்டத்தில் முதல் கட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த 181 குடும்பங்களுக்கு உதவிகள் வழங்கப்பட்டன. இதற்காக, ஒரு கோடியே 46 இலட்சத்து 24 ஆயிரத்து 400 ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. அடுத்தக்கட்ட உதவிகள், முல்லைத்தீவு, மன்னார், வவுனியா, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களுக்கு விரிவுபடுத்தப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)



# சிவபூமி பாடசாலை சாவகச்சேரியில் திறப்பு

தென்மராட்சி, ஜன. 29

மாற்று ஆற்றலுடைய மாணவர்களுக்கான சிவபூமி பாடசாலை சாவகச்சேரியில் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வசந்தி அரசரட்ணம் பாடசாலையை நாடா வெட்டி திறந்து வைத்ததுடன் நினைவுப் படிம கல்லையும் திறந்து வைத்தார்.

ஆசியுரை, அதிதிகள் உரைகளைத் தொடர்ந்து சிவபூமி மாணவர்களின் கலை நிகழ்வுகளும் அரங்கேறின. சாவகச்சேரி சிவபூமி பாட சாலைக்கான இல்லத்தை லண் டனை சேர்ந்த மருத்துவர் கனக சபை கதிர்காமநாதன் - இரட் ணேஸ்வரி தம்பதியர் வழங்கி யிருந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது. (ஐ)



# லொறி விபத்து

வடமராட்சி,

சிமெந்துடன் வந்த லொறி வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்கு உள்ளானது.

வடமராட்சி கிழக்கு - உடுத்துறை - வேம்படியில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற இந்த விபத்தில் தெய்வா தீனமாக எவருக்கும் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை.

விபத்து தொடர்பில் மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

# கோப்பாயில் முத்தமிழ் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜன. 29

"குரலோசை" நுண்கலைகளின் தாயகத்தின் ஏற்பாட்டில் முத்தமிழ் பெருவிழா எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் நான்கு நாட்கள் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் வீரமணி ஐயர் கலையரங்கில் மாலை 5.00 மணி தொடக்கம் 8.00 மணி வரை நடைபெறவுள்ளது.

இந்தநிகழ்வில் குழு, தனி இசை கச்சேரிகள், பரத நாட்டிய நிகழ்வுகள், கவியரங்கு, கூத்து, இசை நாடக பாடல்கள் போன்ற நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

கலாநிதி ஆறு. திருமுருகன், பேராசிரியர் க. மகேஸ்வரன், கவிஞர் சோ. பத்மநாதன், தண்ணுமைவேந்தன் மா. சிதம்பரநாதன் ஆகியோர் முதன்மை விருந்தினர்களாகக் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

சந்தக்கவிஞர் தவ. தஜேந்திரன், கலாவித்தகர் சி. செந்தூரன், முதுகலைமாணி க. வர்ஜிகன், முதுநிலை ஊடகவியலாளர் இளங்கீரன் ஆகியோர் நிகழ்வுகளைத் தலைமை தாங்கி நடத்தவுள்ளனர்.

இந்தநிகழ்வுகளில் பெரும்பாலானவை ஈழத்தின் தமிழிசையை அடிப்படையாகக் கொண்டவை என்றும் குரலோசையின் 10ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு இந்நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது எனவும் அந்த அமைப்பின் நிறுவுநர் வசாவிளான் தவமைந்தன் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
29.01.2026 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம், தை 15

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com

# கற்பனை அரசியல் உரையாடல்கள்

ஏக்கிய ராஜ்ய என்னும் அடிப்படையில் ஒரு புதிய அரசியல் யாப்பு வரப்போகிறது என்பதான உரையாடலொன்று அடிக்கடி முகம் காட்டிக் கொண்டிருக்கிறது. இதனை ஓர் அரசியல் பிரசாரமாகவே முன்னெடுக்கின்றனர். ஒரு வகையில் நாங்கள் அரசியலில் இருக்கிறோம் என்று காண்பிப்பதற்கு இது பயன்படக்கூடும். ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஏக்கிய ராஜ்ய என்னும் பெயரில் புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவரும் எண்ணம் சிறிதளவுகூட இருப்பதாகத் தெரியவில்லை - அவ்வாறு கொண்டுவர முயன்றால், அவர்கள் நீண்ட காலமாக ஆசைப்பட்டது போன்று அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை இல்லாதொழிக்க வேண்டும் என்னும் நோக்கில்தான் அவ்வாறனதொரு யாப்பை கொண்டு வருவார்கள்.

ஏனெனில், அதுதான் அவர்களுடைய நோக்கமாக இருந்தது. இந்த அடிப்படையில்தான் மாகாண சபைகள் ஒரு தோல்வியடைந்த முறைமை என்று ரில்வின் சில்வாவும் கூறுகிறார். ஒரு சாதாரண கட்சியாகவும் தென்பகுதியில் கவனிப்பாரற்ற கட்சியாகவும் இருக்கின்றபோது, இப்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க இவ்வாறு கூறியிருந்தார் - அதாவது, “நாங்கள் உறுதியாக நம்புகிறோம், 13ஆவது திருத்தச் சட்டம் தேசிய பிரச்னைக்கு தீர்வல்ல - அதனை நீக்கவேண்டும் என்பதே எங்களுடைய நிலைப்பாடு.”

இந்தப் பின்புலத்தில், ஜே. வி. பி. தலைமையிலான தேசிய மக்கள் சக்தி ஒரு புதிய அரசியல் யாப்பை கொண்டு வந்தால் எதற்காகக் கொண்டு வருவார்கள் என்பதைப் புரிந்து கொள்வதற்குத் தமிழர்கள் சிரமப்பட வேண்டியதில்லை. ஒரு வகையில் ஜே. வி. பி. அவ்வாறு முயற்சித்தால் தமிழர்கள் மத்தியிலுள்ள சில அரசியல் குழுக்கள் மற்றும் புத்தஜீவிகள் என்போர் மகிழ்ச்சியடைவர் - ஏனெனில், அதைத்தானே அவர்களும் விரும்புகின்றனர். எனவே, புதிய அரசியல் யாப்பு ஒன்று வருமானால் அந்த யாப்பின் ஊடாக ஒற்றையாட்சி நீக்கப்பட வேண்டும் என்னும் ஆசை நிறைவேறாது விட்டாலும்கூட, 13ஆவது திருத்தச் சட்டம் இல்லாதொழிக்கப்பட்ட வேண்டும் என்னும் ஆசை நிச்சயம் நிறைவேறும். ஆகவே ஏதோவொரு வகையில் தீவிர தமிழ்த் தேசியவாதிகளுக்கு நிச்சயம் மகிழ்ச்சியான ஒரு செய்தி உண்டு.

ஆனால், தென்னிலங்கை அரசியல் நிலைமையை அவதானித்தால் அப்படியானதொரு புதிய யாப்பை கொண்டுவரக்கூடிய அரசியல் துணிவோடு ஜே. வி. பி. இருப்பதாகத் தெரியவில்லை. ஏனெனில், அதற்கு ஒரு சர்வஜன வாக்கெடுப்புக்குச் செல்ல வேண்டும். ஆனால், தற்போதுள்ள சூழலில் அது சாத்தியமானதாக இல்லை. ஒருவேளை அரசாங்கம் உண்மையிலேயே புதியதோர் அரசியல் யாப்பை கொண்டுவர வேண்டும் என்று எண்ணியிருந்தால் பாராளுமன்றத் தேர்தல் முடிந்த கையோடு அதனைச் செய்திருக்க வேண்டும் - அவ்வாறு செய்திருந்தால் அந்த அலையோடு சர்வஜன வாக்கெடுப்பிலும் வென்றிருக்கலாம். ஆனால், காலத்தைக் கடத்திவிட்டு - குறிப்பாக, உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளுக்கு பின்னர் நிலைமைகள் முற்றிலுமாக மாறிவிட்டது.

மேலும், இலங்கை மக்களைப் பொறுத்தவரையில் புதிய அரசியல் யாப்பு என்பது ஒரு ஜனவசியமுள்ள விடயமல்ல - மாறாக, அது அரசியல்வாதிகளின் பிரச்னை மட்டும்தான். இந்த நிலைமையை உன்னிப்பாக நோக்கினால் புதிய யாப்பு என்பது சாத்தியமான ஒன்றில்லை - இதனையும் மீறி புதிய அரசியல் யாப்பு ஒன்று வருமாக இருந்தால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அணியினர் கூறுவது போன்று வரப்போவது ஏக்கிய ராஜ்ய அல்ல அதனை விடவும் பலமடங்கு மோசமான ஒரு பௌத்த - சிங்கள யாப்பாகவே அது இருக்கும்.

# ‘டித்வா’ உயிரிழப்பு 649! 173 பேரை காணவில்லை

கொழும்பு, ஜன. 29

“டித்வா” சூறாவளியால் ஏற்பட்ட மண்சரிவு மற்றும் வெள்ளப்பெருக்கு காரணமாக உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 649 ஆக அதிகரித்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த அனர்த்தங்களில் சிக்கி இதுவரை 173 பேர் காணாமல் போயுள்ளனர்.

காணாமற்போனவர்களில் கண்டியில் 69 பேரும், கேகாலையில் 38 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 32 பேரும் அடங்குவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அதிகபட்சமாக கண்டி மாவட்டத்தில் 243 மரணங்கள் பதிவாகியுள்ளன. இதற்கு மேலதிகமாக, பதுளை மாவட்டத்தில் 89 பேரும், நுவரெலியா மாவட்டத்தில் 81 பேரும் உயிரிழந்துள்ளனர்.

தற்போது பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள 85 நிவாரண மையங்களில் 6,680 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் மேலும் தெரிவித்துள்ளது.

மீட்புப் பணிகள் மற்றும் காணாமற்போனவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகள் பொலிஸாரின் ஒத்துழைப்புடன் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

(அ)

# கணக்காய்வாளர் நியமனத்தில் தாமதம் மகாநாயக்கர்கள் ஜனாதிபதிக்கு கடிதம்

கொழும்பு, ஜன. 29

நிரந்தர கணக்காய்வாளர் நியமனத்தில் நீண்டகால தாமதம் ஏற்பட்டுள்ளதற்கு இலங்கையின் உயர் பீட மகாநாயக்கர்கள் இணைந்து ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கு கடிதம் எழுதி கவலை வெளியிட்டுள்ளனர்.

அரசுப் பணவழங்கல்களில் வெளிப்படைத்தன்மையும் பொறுப்புணர்வும் உறுதி செய்யும் தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் தலைவராக வெளிப்புற நபரை நியமிப்பது பொருத்தமற்றது என்ற கருத்தையும் அவர்கள் முன்வைத்துள்ளனர்.

கணக்காய்வாளர் துறையில் நீண்ட அனுபவம் கொண்ட மூத்த அதிகாரியான தர்மபால கம்மன்பில அந்தப் பதவிக்கு மிகத் தகுதியானவர் என தாங்கள் கருதுவதாக மகாநாயக்கர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

அவரை நியமிப்பது அரசின் பொருளாதார முன்னேற்ற முயற்சிகளை மேலும் வலுப்படுத்தும் என்றும் அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

ஆறு ஆண்டுகள் கணக்காய்வாளர் நாயகமாக பணியாற்றிய சுலந்த விக்ரமரத்ன 2025 ஏப்ரலில் ஓய்வு பெற்றார். அதனைத் தொடர்ந்து, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கணக்காய்வு அதிகாரியான எச்.டி.பி. சந்தனவை ஜனாதிபதி நியமித்தார்.

ஆனால் அந்த நியமனத்தை அரசியலமைப்புச் சபை நிராகரித்தது. பின்னர், தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அடுத்த மூத்த அதிகாரியான தர்மபால கம்மன்பிலவை

ஆறு மாதங்களுக்கு செயற்குழு கணக்காய்வாளராக ஜனாதிபதி நியமித்தார். அதன்பின், மூத்த துணைக் கணக்காய்வாளர் நாயகம் எல்.எஸ்.ஐ. ஜெயரத்னவை

இடைக்கால அடிப்படையில் நியமிக்க ஜனாதிபதி பரிந்துரைத்தாலும், அந்த நியமனமும் நிராகரிக்கப்பட்டது. பின்னர், இலங்கை இராணுவத்தின் உள்கணக்காய்வு இயக்குநரான ஓ.ஆர். ராஜசிங்கவை அந்தப் பதவிக்கு ஜனாதிபதி பரிந்துரைத்தது பலரிடமும் கேள்விகளை எழுப்பியது. அந்த நியமனமும் மறுக்கப்பட்டது.

இதன் விளைவாக, முக்கியமான இந்தப் பதவி 2025 டிசெம்பர் 7 முதல் வெற்றிடமாகவே உள்ளது. (அ)

# நாணயக் கொள்கை வீதத்தை மாற்றாமல் வைத்திருக்க முடிவு

கொழும்பு, ஜன. 29


நாணயக் கொள்கைச் சபையானது நேற்று முன்தினம் இடம்பெற்ற அதன் கூட்டத்தில் ஓரிரவு கொள்கை வீதத்தினை 7.75 வீதம் கொண்ட அதன் தற்போதைய மட்டத்தில் பேணுவதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

உள்நாட்டு மற்றும் உலகளாவிய அபிவிருத்திகள் ஆகிய இரண்டையும் கவனமாகக் கருத்திற்கொண்டதன் பின்னர் சபை இத்தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

தற்போதைய நாணயக் கொள்கை நிலைப்பாடு பணவீக்கத்தை எதிர்வரும் காலத்தில் 5 வீதம் கொண்ட இலக்கை நோக்கி வழிநடத்துவதில் உதவும் அதே வேளை வளர்ச்சிக்கு ஆதரவளிக்குமென சபை கருதுவதாகவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது.

(அ)

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



ஜனவரி - 29 வியாழக்கிழமை
விசுவாவசு வருடம் - தை 15
நல்ல நேரம் : 10.30 - 12.00
ராகு காலம் : 01.30 - 03.00
திதி : துவாதசி




**மேடம்**
குடும்பத்தில் நிம்மதி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். உறவினர்களால் ஆதாயமடைவீர்கள். வியாபாரத்தில் போட்டிகள் குறையும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உதவுவார்கள்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் நினைத்த வேகத்தில் சில வேலைகளை முடிக்க முடியாமல் தடை தாமதம் ஏற்படும். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும்.

**மிதுனம்**
மறைமுகவிமர்சனங்களும்தாழ்வுமனப்பான்மையும் வந்துச் செல்லும். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். சக ஊழியர்களால் சங்கடங்கள் வரும். அதிகம் உழைக்க வேண்டும்.

**கடகம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். சகோதரர்களால் பயனடைவீர்கள். வாகன வசதிப் பெருகும். உத்தியோகத்தில் தைரியமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.

**சிம்மம்**
உங்கள் செயலில் வேகம் கூடும். எதையும் சாதிக்க முடியும் என்ற தன்னம்பிக்கை பிறக்கும். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். நம்பிக்கையை பெறுவீர்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். அவசரத்திற்கு கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை திருப்பித் தருவீர்கள். புது அதிகாரி உங்களை மதிப்பார். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் புதிய முயற்சிகள் தள்ளிப்போய் முடியும். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். மற்றவர்களின் வேலையையும் சேர்த்து பார்க்க வேண்டி வரும்.

**விருச்சிகம்**
உங்களின் திறமைகளை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் கிடைக்கும். சகோதர வகையில் நன்மை உண்டு. உத்தியோகத்தில் பெரிய பொறுப்புகளை ஏற்பீர்கள். தன்னம்பிக்கை பிறக்கும் நாள்.

**தனுசு**
குடும்பத்தினருடன் சுபநிகழ்ச்சிகளில் கலந்துக் கொள்வீர்கள். வழக்கில் திருப்பம் ஏற்படும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. சில புதுமைகளைச் செய்து எல்லோரின் கவனத்தையும் ஈர்ப்பீர்கள்.

**மகரம்**
புதிய முயற்சிகள் யாவும் வெற்றியடையும். பிள்ளைகள் குடும்ப சூழ்நிலை அறிந்து செயல்படுவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் உங்கள் வேலைகளைப் பகிர்ந்துக் கொள்வார்கள்.

**கும்பம்**
எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். தாயாருக்கு கை கால் வலி சோர்வு வந்து போகும். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். உத்தியோகத்தில் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள்.

**மீனம்**
சவால்களில் விவாதங்களில் வெற்றி பெறுவீர்கள். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். அரசால் அனுகூலம் உண்டு. சில நுணுக்கங்களை கற்றுக் கொள்வீர்கள். தைரியம் கூடும் நாள்.

# தொலைபேசி பயன்படுத்திக்கொண்டு பஸ் செலுத்திய சாரதி இடைநிறுத்தம்!

மன்னார், ஜன. 29

பயணிகள் போக்குவரத்துச் சேவை விதிமுறைகளை மீறி, தொலைபேசியைப் பயன்படுத்தியவாறு பஸ்ஸை செலுத்திய தனியார் பஸ் சாரதி ஒருவர் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளதுடன், பாடசாலை மாணவர்களை ஏற்றாமல் சென்ற மற்றொரு பஸ் சாரதி மற்றும் நடத்துநருக்குக் கடுமையான எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதென்று வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எஸ்.விமலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில்-

கடந்த 25ஆம் திகதி காலை 9.45 மணியளவில் மன்னாரிலிருந்து புறப்பட்ட தனியார் பஸ்ஸின் சாரதி, தனங்கிளப்பு வரையிலான பயணத்தின்போது, வீதிப் பாதுகாப்பு மற்றும் சேவை விதிமுறைகளை மீறி, தொலைபேசியில் உரையாடியவாறு பஸ்ஸை செலுத்தியமை தொடர்பில் காணொலி ஆதாரங்களுடன் முறைப்பாடு கிடைக்கப் பெற்றிருந்தது.

இம்முறைப்பாடு தொடர்பில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், குறித்த பஸ் சாரதி மறு அறிவித்தல் வரும் வரை பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

அதேபோன்று, கடந்த 23ஆம் திகதி மதியம் 1.40 மணியளவில், மாங்குளம் மகா வித்தியாலய மாணவர்களை ஏற்றாமல் சென்ற தனியார் பஸ் தொடர்பில், பாடசாலை நிர்வாகத்தால் அதிகார சபைக்கு எழுத்துமூலமான முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

அதற்கமைவாக, தொடர்புடைய பஸ்ஸின் சாரதி மற்றும் நடத்துநர் ஆகியோர் விசாரணைக்கு அழைக்கப்பட்டு, விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டதுடன், அவர்களுக்கு உத்தியோகபூர்வமான கடும் எச்சரிக்கையும் வழங்கப்பட்டுள்ளது.

பொதுப் போக்குவரத்துச் சேவைகளின் தரம் மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில், இவ்வாறான விதிமீறல்கள் தொடர்பில் பொதுமக்கள் ஆதாரங்களுடன் முறைப்பாடுகளை முன்வைக்கும் பட்சத்தில், சம்பந்தப்பட்டவர்களுக்கு எதிராகத் தயங்காமல் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்- என குறிப்பிட்டுள்ளார். (அ)

# மஹா கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஜன. 29

குப்பிழான்- சொக்கவளவு சோதி விநாயகர் தேவஸ்தான புனராவர்த்தன பிரதிஸ்டா அஷ்டபந்தன உத்தம நவகுண்டபக்ஷ மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 06 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 07. 20 மணிமுதல் 08.35 வரையுள்ள சுபநேரத்தில் நடைபெறவுள்ளது.

கர்மாரம்பம் 03 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அதிகாலை 05. 00 மணிக்கும், எண்ணெய் காப்பு சாத்தல் 05ஆம் திகதி வியாழக்கிழமை காலை 09.30 மணி முதல் மாலை 04.30 மணி வரை நடைபெறவுள்ளது. பிரதிஷ்டா பிரதமகுரு உதயபானு சிவசிறீ கிருஷ்ண பிரணவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள மஹா கும்பாபிஷேகத்தில் ஆசியுரையை புன்னாலைக்கட்டுவன் சித்தாந்தபானு, பண்டிதர். சிவசிறீ து. கு. ஜெகதீஸ்வரக்குருக்களும் ஈவினைப் பிள்ளையார் கோவில் பிரதம குரு ஜோதிட பூஷணம் சிவசிறீ தி. கெங்காதரக்குருக்களும் புன்னாலைக்கட்டுவன் பிரம்மசிறீ பா. சுந்தரராஜசர்மாவும் வழங்கவுள்ளனர்.

அருளுரையை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர், கலாநிதி ஆறு. திருமுகனும் நேர்முக வர்ணனையை பிரசங்க சக்கரவர்த்தி, சைவப்புலவர் சி. கா. கமலநாதன் மற்றும் பிரசங்க பூஷணம், சைவப்புலவர் பொன். சந்திரவேலும் வழங்கவுள்ளனர்.

# சிமெந்து ஏற்றிவந்த லொறி விபத்து!



யாழ்ப்பாணம், ஜன. 29

வடமராட்சி கிழக்கு உடுத்துறை வேம்படி பகுதியில் சிமெந்து ஏற்றிவந்த லொறி ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து விபத்திற்குள்ளானது.

விபத்தில் லொறியில் பயணித்தவர்களுக்கு எந்தவித பாதிப்பம் இல்லை என தெரிவிக்கப்படுகிறது.

சம்பவ இடத்திற்கு சென்ற மருதங்கேணி போக்குவரத்து பொலிஸார் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)


# பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு சட்டவிரோத மதுபானம் விற்றவர் கைது

யாழ்ப்பாணம், ஜன. 28

சட்டவிரோதமான முறையில் மதுபானத்தை வீட்டில் வைத்து விற்பனை செய்த சந்தேகநபர் ஒருவர் வட்டுக்கோட்டை பகுதி யில் வைத்து கைது செய்யப்பட் டுள்ளார்.

பொலிஸ் புலனாய்வுப் பிரி வினருக்கு மதுபானத்தை விற்பனை செய்தபோதே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

வடக்கு மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் ஜி.எம்.எச்.புத்திக்க சிறிவர்தன வுக்கு கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில், யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்ச கரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினரால் இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



கைது செய்யப்பட்ட சந்தேக நபர், சான்றுப் பொருட்களுடன் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட் டுள்ளார்.

அவரை மல்லாகம் நீதிமன் றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# இராணுவம் விடுவிக்கவுள்ள காணியை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பார்வை

யாழ்ப்பாணம், ஜன. 29

இராணுவ கட்டுப்பாட்டிலிருந்து விடுவிக்கப்படவுள்ள காணியை சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பார்வையிட்டார்.

பண்டத்தரிப்பு கிராம அலுவலர் பிரிவிலுள்ள சண்டிலிப்பாய் பிரதேச சபையின் கொல் களம் அமைந்துள்ள காணியையே பிரதேச செயலாளர் குமாரசாமி பிரபாகரமூர்த்தி தலைமையிலான குழுவினர் கள விஜயம் மேற்கொண்டு பார்வையிட்டனர்.

குறித்த காணியானது 2012 ஆம் ஆண்டு முதல் இராணுவத்தினரின் பயன்பாட்டில் இருந்து வரும் நிலையில் பண்டத்தரிப்பு இராணுவ முகாமின் கட்டளை அதிகாரியின் அழைப்புக்கு அமைவாக சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் குறித்த பகுதியை பார்வையிட்டார்.

அந்த வகையில் குறித்த காடாப்புலம் காணி பிரதேச செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைகளை மறுசீரமைக்கும் தேசிய வேலைத்திட்டம் ஆரம்பம்!

## கல்வி பிரதி அமைச்சர் தகவல்

கொழும்பு, ஜன. 29

நாடளாவிய ரீதியில் பாடசாலைகளை மறுசீரமைக்கும் தேசிய வேலைத்திட்டத்தை கல்வி அமைச்சு உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக தெரிவு செய்யப்பட்ட 170 பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் முழுமையாக அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கல்வி சீர்திருத்த நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக முன்னெடுக்கப்படும் இப்புதிய திட்டத்தின் கீழ், சில பாடசாலைகளை ஒன்றிணைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பாடசாலைகளை ஒன்றிணைப்பது தொடர்பான இறுதி முடிவுகளை எடுக்கும் அதிகாரம் அந்தந்த மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

மாணவர்களுக்கு மிகவும் நெருக்கமான மற்றும் தரமான கற்றல் சூழலை உருவாக்குவதே இந்த மறுசீரமைப்பு திட்டத்தின் பிரதான நோக்கமாகும்.



தற்போது இலங்கையில் மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபைகளின் கீழ் 11 ஆயிரத்து 100 பாடசாலைகள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

இதில் 5,000 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கை 200 இற்கும் குறைவாகவே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிலைமை சீர்செய்து மாணவர்களுக்கு சமமான கல்வி வாய்ப்புகளை உறுதிப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

(அ)

# தீர்வு கிடைக்காவிட்டால் தொழிற்சங்க நடவடிக்கை

## ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் அரசுக்கு எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 29

ரயில்வே திணைக்களத்தில் நிலவி வரும் நிர்வாகச் சீர்கேடுகள் மற்றும் ஊழியர் பிரச்னைகளுக்கு உடனடியாகத் தீர்வு காணப்படாவிட்டால், தமக்கு சட்ட ரீதியாக வழங்கப்பட்டுள்ள தொழிற்சங்க உரிமைகளைப் பயன்படுத்திப் போராட்டங்களில் ஈடுபடப் போவதாக ரயில் நிலைய அதிபர்கள் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையில்-

ரயில்வே திணைக்களத்தின் தொடர்ச்சியான நிருவாகத் திறமையின்மை காரணமாக பயணிகள் மட்டுமன்றி, ஊழியர்களும் பெரும் அசௌகரியங்களை எதிர்கொண்டுள்ளனர்.

நிலைய அதிபர்களுக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு தொடர்பான இடைக்கால விதிமுறைகளை அமுல்படுத்துவதில் நிலவும் தாமதம், ஊழியர்களின் வேலைத்திறனையும் மனநிலையையும் கடுமையாகப் பாதித்துள்ளது.

அரச ஊழியர்களுக்கான அனர்த்தக் கடனை அரசாங்கம் 400,000 ரூபாவாக அதிகரித்துள்ளபோதிலும், ரயில்வே திணைக்களம் அதனை 250,000 ரூபாவாகக் குறைத்து வழங்கத் தீர்மானித்துள்ளது.

இது அரசாங்கத்தின் தீர்மானத்தை அவமதிக்கும் செயல். ஊழியர்களுக்கு இழைக்கப்படும் அநீதி.

முறையற்ற பயணத் திட்டமிடல் மற்றும் ரயில் நேர அட்டவணைகளில் நிலவும் குளறுபடிகளால் பயணிகள் நாளாந்தம் பாதிப்படைகின்றனர்.

இதற்குத் திணைக்கள நிர்வாகமே முழுப் பொறுப்பேற்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிடின், தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை-என்றுள்ளது.

(அ)

# சட்டத்தை மதிக்க வேண்டிய சமூக பொறுப்பு ஷிரந்திக்கு!

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ

கொழும்பு, ஜன. 29

"சட்டத்தை மதித்து செயல்பட வேண்டிய சமூக பொறுப்பு ஷிரந்தி ராஜபக்ஷவுக்கு உள்ளது." - என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் மாநாடு அரசாங்கம் தகவல் திணைக்களத்தில் நேற்று முன் தினம் நடைபெற்றது.

இதன்போது பொலிஸ் நிதி குற்ற விசாரணைப் பிரிவில் முன்னிலையாவதற்கு ஷிரந்தி ராஜபக்ஷ இரு வாரங்கள் அவகாசம் கோரியுள்ளமை தொடர்



பில் கேள்வி எழுப்பட்டது.

இதற்கு பதிலளித்த அமைச்சரவைப் பேச்சாளர் கூறியவை வருமாறு-

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பாரியாரே ஷிரந்தி ராஜபக்ஷ. அவர் இந்நாட்டில் முதல் பெண்மணியாக இருந்தவர். சிறார் பாடசாலையை வழிநடத்துபவர்.

எனவே, உரிய வகையில் விசாரணைக்கு ஒத்துழைக்க வேண்டிய பொறுப்பு அவருக்கு உள்ளது. சட்டத்தை மதித்து செயல்பட வேண்டும்- என்றார்.

# இளைஞர்களின் குற்றவியல் நடத்தை 200 வீதம் அதிகரிப்பு

## விசேட மருத்துவ நிபுணர் எச்சரிக்கை

கொழும்பு, ஜன. 29

கடந்த 10 ஆண்டுகளில் 16 முதல் 22 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களின் குற்றவியல் நடத்தைகள் பாரியளவில் அதிகரித்துள்ளதாக தடயவியல் மனநல விசேட மருத்துவ நிபுணர் தாரக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

மனநல விஞ்ஞான நிறுவனத்தின் 100 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனை கூறினார்.

2015 மற்றும் 2016 ஆம் ஆண்டு காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில், நீதிமன்ற விசாரணைகளின் மூலம் குற்றவாளிகளாகக் காணப்பட்டு தண்டனை வழங்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 200 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இதே நிலை நீடித்தால், எதிர்காலத்தில் நாட்டின் சிறைச்சாலைகள் 16 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களாலேயே நிரம்பி வழியும் என அவர் எச்சரித்தார்.

மனநலப் பாதிப்பு உள்ளவர்கள் அனைவரும் குற்றவாளிகள் என்ற சமூகக் கருத்து முற்றிலும் தவறானது என அவர் சுட்டிக்



காட்டினார்.

குற்றச் செயல்களில் ஈடுபடும் இளைஞர்களிடம் ஆக்கபூர்வமான திறமைகள் உள்ளன. முறையான அறிவியல் சிகிச்சைகள் மற்றும் புனர்வாழ்வு மூலம் அவர்களை நல்வழிப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார்.

தெற்காசியாவிலேயே மிகப்பெரிய தடயவியல் மனநலப் பிரிவு இலங்கையில் அமைந்துள்ளது. ஒரு குற்றத்தைச் செய்யும்போது நபரின் மனநிலை எவ்வாறு இருந்தது, அவர்களால் நீதிமன்றத்தில் சாட்சியமளிக்க முடியுமா மற்றும் சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்துதல் போன்ற விடயங்களை இப்பிரிவு ஆராய்வதாகவும் அவர் தெரிவித்தார்.

(அ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர தினத்தை எதிர்த்து வடகிழக்கில் கரிநாள் பேரணி!

## அனைத்து தரப்புக்களுக்கும் பகிரங்க அழைப்பு

திருமலை, ஜன. 29

சுதந்திர தினத்துக்கு எதிராக வடக்கு-கிழக்கில் நடைபெற வுள்ள கரிநாள் பேரணிக்கு அனைத்து தரப்புக்களும் பங்கேற்று வலுச்சேர்க்கவேண்டும் என தென் கைலை ஆதீன முதல்வர் மற்றும் திருகோண மலை மறை மாவட்ட ஆயர் ஆகியோர் அழைப்பு விடுத்த னர்.

இலங்கையின் சுதந்திர தின மான பெப்ரவரி 4 ஆம் திகதியை கரி நாளாக பிரகடனப்படுத்தி வடக்கு-கிழக்கில் போராட் டத்தை நடத்த தீர்மானித்துள்ள யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம், அதற்கு பொதுமக் களை அணி திரட்டி வலுச்சேர்க் கும் நடவடிக்கையை ஆரம்பித் துள்ளது.

இதனொரு கட்டமாக தென் கையிலை ஆதீன முதல்வர் தவத் திரு அகத்தியர் அடிகளார் மற் றும் திருகோணமலை மறை மாவட்ட ஆயர் நோயல் இம் மானுவேலை யாழ்ப்பாண பல் கலைக்கழக மாணவர் ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று முன் தினம் நேரில் சந்தித்து கலந்துரையாடி னார்.

இதன் பின்னர் கருத்து தெரி வித்த திருகோணமலை மறை மாவட்ட ஆயர்- தமிழ் மக்க ளின் தேவைகள் பலவாறாக இருந்தாலும் பல வழிகளில் அவை நிராகரிக்கப்படுகின்றன அல்லது பூர்த்தி செய்யப்படா மல் இருக்கின்றன. இதை வலி யுறுத்தி நடைபெறும் போராட் டம் வெற்றி பெற அனைவரும் ஆதரவு அளிக்க வேண்டும் - என் றார்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த தென்கையிலை ஆதீ னம்-

1948 ஆம் ஆண்டு இலங் கைக்கு சுதந்திரம் கிடைத்தது. அன்றிலிருந்து தமிழ் மக்களுக்கு சாபக்கேடான நிலையே அமைந் தது. அந்த சுதந்திர தின நாளை கரி நாளாக அனுஷ்டிக்க வருங் கால சந்ததியான பல்கலைக்க ழக இளைஞர்கள் முயற்சிகளை முன்னெடுக்கிறார்கள்.

அந்த முன்னெடுப்புக்கு இலங்கையில் வாழ்கின்றவர்கள் புலம்பெயர் தேசத்தில் வாழ் கின்ற மக்கள் பூரண ஆதரவை வழங்க வேண்டும். இந்தப் பூரண ஆதரவே எமது மக்களின் இருப்பையும் சிதைவினையும் தடுக்கவும் உதவும்-என்றார். (அ)



## சித்தாண்டி வேலோடுமலையில் பாலமுருகனின் வேல் பிரதிஷ்டை

மட்டக்களப்பு, ஜன. 29

மட்டக்களப்பு சித்தாண்டி வேலோடுமலை முருகன் ஆல யத்தில் பிரபல நாதஸ்வர டிசக் கரவர்த்தி ஈழ நல்லூர் பாலமுரு கனால் புதிய வேல் அன்பளிப்பு செய்யப்பட்டு பிரதிஷ்டை செய் யப்பட்டது.

இந்த நிகழ்வு சித்தர்களின் குரல் ஆஸ்தான தலைவர் சிவசங் கர் ஜீ ஏற்பாட்டில் நடைபெற் றது.

வேலோடுமலை தேவஸ் தான ஆதீனகர்த்தா தியாகராஜ சுவாமிகள் முன்னிலையில் மகேஸ் வரன் சுவாமிகள் சகிதம் விசேட பூசையின் பின்னர் ஊர்வலமாக கொணர்ந்து மூலஸ்தானத்திற்கு பின்னால் 18 சித்தர்களுக்கு முன் னால் பிரதிஷ்டை செய்யப்பட் டது.

இந்த வேல் அன்பளிப்பு நிகழ்வு 210 சித்தர்களை வரவ ழைக்கும் வேலோடுமலை வேள்வி யாகத்தின் ஒரு பகுதி யாக நடைபெற்றது.

நாதஸ்வர வித்துவான் பால முருகன் குழுவினரின் நாதஸ்வ ரக் கச்சேரியும் நடுநிசியில் நடை பெற்றது. (அ)


## அல்-ஹிலால் வித்தியாலயத்தில் புதுமுக மாணவருக்கு வரவேற்பு

அம்பாறை, ஜன. 29

சாய்ந்தமருது அல்-ஹிலால் வித்தியாலயத்தில் தரம் 6 இற்கு அனுமதிக்கப்படும் மாணவர் களை வரவேற்கும் நிகழ்வு நேற்று முன் தினம் பாடசாலை முன்ற லில் விமரிசையாக நடைபெற் றது.

பாடசாலை அதிபர் கே.எல். ஏ. ஜௌபரின் வழிகாட்டலில், உதவி அதிபர் எம்.எச்.லாபிரின் மேற்பார்வையில் நடைபெற்ற இந்நிகழ்வில், இப்பாடசாலை யின் பழைய மாணவரும், பண் டாரநாயக்க சர்வதேச விமான நிலைய குடிவரவு அதிகாரியு மான எம்.எம். அஹமட் சனூன் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு உரையாற்றினார்.

இதன்போது, மாணவர்கள் ஆசிரியர்களால் மாலை அணி வித்து வரவேற்கப்பட்டதுடன், பரிசு வழங்கி மகிழ்விக்கப்பட்ட னர். (அ)



## அக்கரைப்பற்று பிரதேசத்தின் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டம்



அம்பாறை, ஜன. 29

அம்பாறை மாவட்ட அக்க ரைப்பற்று பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் அக்கரைப்பற்று பிரதேச செய லக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அக்கரைப்பற்று பிரதேச செயலாளர் டீ. எம். எம். அன் ஸாரின் ஏற்பாட்டில், அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங் களின் ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும், அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினரும், பாராளுமன்ற உறுப்பினருமான அபூபக்கர் ஆதம்பாவாவின் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ். உது மாலெப்பை, எம்.எஸ். அப்துல் வாஸித் மற்றும் அக்கரைப்பற்று மாநகர முதல்வர் ஏ.எல்.எம். அதாவுல்லாஹ், உதவி திட்டமி டல் பணிப்பாளர், பிரதேச செய லக உத்தியோத்தர்கள், முப்ப டையினர், திணைக்களங்களின் உயர் அதிகாரிகள், பொது அமைப்புக்களின் தலைவர்கள், அக்கரைப்பற்று பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர் கள் எனப்பலரும் கலந்து கொண் டனர். (அ)

# நாவிதன்வெளி பிரதேச சபை ஏற்பாட்டில் பொங்கல் விழா!

## பாரம்பரிய முறையில் ஏற்பாடு






அம்பாறை, ஜன. 29

நாவிதன்வெளி பிரதேச சபையின் ஏற்பாட்டில் உழவர் திருநாளாம் தைத் திருநாளை முன்னிட்டு பொங்கல் விழா கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழா நாவிதன்வெளி பிரதேச சபையின் தவிசாளர் இந்திரன் ரூபசாந்தன் தலைமை யில் தமிழர் பாரம்பரியத்தை பிரதிபலிக்கும் வகையில் அறு வடை நிகழ்வு, புதிர் எடுத்தல், நெல் குற்றி புத்தரிசி எடுத்து பொங்கல் வைக்கும் நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வுகளை பிரதம அதிதியாக கலந்து கொண்ட அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் ஐ.எஸ்.ஏ.கமல் நெத்மினி ஆரம் பித்து வைத்தார்.

மேலும் உழவர் கண்காட்சி யும், பாடசாலை மாணவர்களி னால் தமிழரின் கலை, கலா சார, பண்பாட்டு விழுமியங் களை பறைசாற்றும் வகையில் பாரம்பரிய நடனங்கள், சிலம் பம் உள்ளிட்ட பல்வேறு கலை



நிகழ்வுகளும் இடம்பெற்று விழாவை சிறப்பித்தன.

விழாவில் கலந்து கொண்ட அதிதிகளுக்கு தமிழர் மாண்பை எடுத்தியம்பும் வகையில் நினை வுச் சின்னங்கள், நவதானியங் கள் அடங்கிய பொற்கிழிகள் வழங்கப்பட்டு, பொன்னாடை போர்த்தி மரியாதை செலுத்தப் பட்டது.

இத்தமிழர் பாரம்பரிய பொங் கல் விழாவில் பிரதம அதிதி யாக அம்பாறை மாவட்ட உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கமல் நெத்மினி, சிறப்பு அதிதி யாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையர சன், முன்னாள் பிரதி பிரதம செயலாளர் மு. கோபாலரெத் தினம், முன்னாள் தவிசாளர் கள், நாவிதன்வெளி பிரதேச சபை உப தவிசாளர் கு. புவன ரூபன், பிரதேச சபை உறுப்பி னர்கள், செயலாளர், சுகாதார வைத்திய அதிகாரி, பாடசாலை மாணவர்கள், பெற்றோர் உள் ளிட்ட பலரும் கலந்து கொண் டனர். (அ)

## மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் பரிசோதனை முகாம்

மட்டக்களப்பு, ஜன. 29

கல்முனை வலயக் கல்வி அலு வலகத்தின் ஏற்பாட்டில், இவ் வாண்டு சாதாரண தரப் பரீட் சைக்குத் தோற்றவுள்ள மாண வர்களுக்கான பரிசோதனை முகாம் நிகழ்வு செவ்வாய்க்கி ழமை மருதமுனை சம்ஸ் மத்திய கல்லூரியில் வெற்றிகரமாக நடைபெற்றது.

பாடசாலை அதிபர் எம்.பி. ஏ.ராஜி தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில், கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹூதுல் நஜீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்தார்.

இந்நிகழ்வில் கல்வி அதிகா ரிகள், ஆசிரியர்கள் மற்றும் கல் முனை வலயத்திற்குட்பட்ட பல பாடசாலைகளின் மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்த னர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலுக்கு...

வகித்தபோது, அவரின் மனைவி மைத்திரி விக்ரமசிங்கவின் பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்காக லண்டன் செல்வதற்கு அரச நிதியை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. இது தொடர்பில் கடந்த ஆண்டு ஒகஸ்ட் 22ஆம் திகதி வாக்குமூலம் அளிப்பதற்காக குற்றப் புலனாய்வு பிரிவுக்குச் சென்ற ரணில் கைது செய்யப்பட்டார். நீதிமன்ற உத்தரவின்படி ஒகஸ்ட் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார். அவரின் உடல்நிலை மோசமானதால் கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். பின்னர் மருத்துவ காரணங்களுக்காக தலா 50 இலட்சம் ரூபாய் பெறுமதியான 3 ஆட்பிணைகளில் விடுவிக்கப்பட்டார்.

இந்த வழக்கில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தொடர்பான விசாரணைகளை நேற்றைய தினத்துக்குள் நிறைவுறுத்த நீதிமன்றம் முன்னர் உத்தரவிட்டிருந்தது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, ரணிலின் பிணையை இரத்துச் செய்யுமாறும் வழக்கு தாக்கல் செய்த தரப்பு கோரியது. எனினும், முன்னர் பிறப்பித்த உத்தரவை மறுபரிசீலனை செய்ய விரும்பவில்லை என்று நீதிவான் கூறினார். அத்துடன், வழக்கை எதிர்வரும் ஏப்ரல் 29ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

## கிவுல்...

இதேநேரம், கிவுல் ஓயா திட்டத்துக்கு எதிராக நடைபெறவுள்ள போராட்டத்தில் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியுடன் ஈ. பி. ஆர். எல். எவ்வும் கலந்து கொள்வது என்று அதன் அரசியல் செயல்குழு கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் சுரேஷ் க. பிறேமசந்திரன் தெரிவித்துள்ளார். (ஐ)

## ஐ.ம்.எவ்...

முன்னெடுத்துச் செல்ல அரசாங்கத்துக்கும் சர்வதேச நாணய நிதியத்துக்கும் இடையில் பொது இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

டித்வா புயலால் ஏற்பட்ட சேதங்களை மதிப்பிடுவதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கும் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது. இந்த சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்ட விடயம் சுட்டிக்காட்டப்பட்டது.

இலங்கை பொருளாதாரம் படிப்படியாக மீட்சியடைந்து வரும்வேளையில் இவ்வாறானதோர் அனர்த்தம் ஏற்பட்டமை குறித்து தமது வருத்தத்தைத் தெரிவித்த நாணய பிரதிநிதிகள், சவால்களுக்கு மத்தியிலும் மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் உட்கட்டமைப்புகளை மேம்படுத்தவும் அரசாங்கம் எடுத்த விரைவான நடவடிக்கைகளைப் பாராட்டினர். அரசாங்கம் அனர்த்தத்தை கையாண்ட விதம் குறித்து மக்கள் மத்தியில் பெரும் வரவேற்பு காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினர்.

அத்துடன், கடந்த ஆண்டில் அரசாங்கம் கடைப்பிடித்த உயர் நிதி ஒழுக்கமானது இந்தச் சவாலை எதிர்கொள்வதற்கு முக்கிய காரணியாக அமைந்ததாக பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

திறைசேரியில் மேலதிக உபரி நிதி காணப்பட்டதன் காரணமாகவே, அனர்த்த நிவாரணப் பணிகளுக்காக 50 ஆயிரம் கோடி ரூபாய் மேலதிக மதிப்பீட்டை முன்வைக்க அரசாங்கத்தால் முடிந்ததாகக் குறிப்பிட்டு அதனைப் பெரிதும் பாராட்டினர்.

இலங்கை தற்போது சரியான பொருளாதார பாதையில் பயணிப்பதாகத் தெரிவித்த சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகள், நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் 6ஆவது தவணையை வழங்குவது தொடர்பான பேச்சுகள் எதிர்வரும் மார்ச் மாதம் மீண்டும் ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டனர்.

இதன்போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க, இந்த அனர்த்தத்தால் வறுமையில் வாழும் கிராமப்புற மக்களே பெரிதும் பாதிக்கப்பட்டனர் என்றும் அவர்களின் வாழ்வாதாரம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்புகள் சீர்குலைந்தன எனவும் சுட்டிக்காட்டினார். கிராமப்புற மக்களின் வாழ்வை மீண்டும் கட்டியெழுப்பவே இந்த 50 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டதாக அவர் விளக்கமளித்தார்.

இந்த நடவடிக்கை எந்தக் காரணம் கொண்டும் முறையான நிதி முகாமைத்துவத்திலிருந்து விலகிச் செல்லும் பொறுப்பற்ற செயல் அல்ல, புள்ளிவிபரங்களின் மூலமான பொருளாதார வெற்றிகள் உண்மையாகவே சாதாரண மக்களைச் சென்றடையச் செய்வதே அரசாங்கத்தின் நோக்கம் என்றும்இ நீண்டகாலமாகப் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கே முன்னுரிமை அளிக்கப்படுவதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்ட உடன்படிக்கையில் எவ்வித மாற்றங்களும் இன்றி, அதனைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்ல இரு தரப்பினரும் இதன்போது உடன்பட்டனர் - என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## டித்வா...

சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், தேசிய மற்றும் பூகோள நிச்சயமற்றதன்மைகள் ஆகியவற்றின் போக்கை அடிப்படையாகக் கொண்டு ஓரிரவு கொள்கை வீதத்தை 7.75 சதவீதத்தால் தொடர்ந்து பேணுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தற்போதைய நாணய கொள்கை நிலைப்பாடானது பணவீக்கத்தை 5 சதவீதம் கொண்ட இலக்கை நோக்கியதாக அமைய செல்வாக்குச் செலுத்தும்.

2025ஆம் ஆண்டு முதல் 09 மாத காலப்பகுதியில் நாட்டின் பொருளாதாரமானது 5.0 சதவீதத்தால் வளர்ச்சியடைந்தது. டித்வா பேரிடரால் பொருளாதார வளர்ச்சி மிதமானதன்மையில் காணப்பட்டாலும் அது எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தவில்லை.

டித்வா பேரிடரால் பொருளாதாரத்துக்கு நீண்டகால பாதிப்புகள் ஏற்படாது. நெருக்கடி நிலைமையை குறுகிய காலத்தில் சீரமைக்க முடியும். அதற்கான கையிருப்பு மற்றும் பொருளாதார ஸ்திரநிலைமை வலுவானதாகவே காணப்படுகிறது.

பொருளாதார நெருக்கடியின்போது திறைசேரியில் ரூபாயும் இல்லை டொலரும் இல்லை. அதனால்தான் சமூக கட்டமைப்பில் - சேவை விநியோகத்தில் பாதிப்பு ஏற்பட்டது. அவ்வாறான நிலைமை தற்போது கிடையாது. சவால்களுக்கு முகங்கொடுக்கும் பொருளாதர நிலைமை ஸ்திரமாகவுள்ளது.

அண்மைகாலமாக பெருந்தோட்ட துறையில் முதலீடு செய்வது தொடர்பில் சமூக வலைத்தளங்களில் பல்வேறுபட்ட விளம்பரங்கள் வெளியாகியுள்ளதை அவதானிக்க முடிகிறது. இலங்கையில் பெருந்தோட்டத்துறை முதலீடு தொடர்பில் எவ்விதமான கண்காணிப்பு மற்றும் ஒழுங்குப்படுத்தல்கள் ஏதும் கிடையாது.

பெருந்தோட்ட துறையில் முதலீடு என்ற போர்வையில் சட்டவிரோத பிரமிட் நடவடிக்கைகள் இடம்பெறுவதை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான முறைகேடுகள் குறித்து 18 பேரிடமும் ஒருசில நிறுவனங்களிடமும் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

பெருந்தோட்டத்துறை முதலீட்டு அதிக இலாபத்தை பெற்றுக்கொள்ளலாம் என்று குறிப்பிடப்படும் விளம்பரங்கள் தொடர்பில் பொதுமக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் - என்றார். (ஐ)

## எந்தப்...

பிள்ளைகளுக்கும், கல்வி அமைச்சர் என்ற ரீதியில் நேற்று விடுத்த வாழ்த்துச் செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு,

ஒவ்வொரு பிள்ளையினதும் சமமான கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் என்ற ரீதியில் முன்னெடுக்கும் பொறுப்பை ஏற்றுள்ளோம். இந்த நேர்மையான முயற்சியை வெற்றிகரமாக முன்னெடுக்க அனைவரதும் ஆக்கபூர்வமான கருத்துக்களை மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறோம்.

பாடசாலை செல்லும் முதல் நாள் எமது அன்புக்குரிய பிள்ளைகளின் வாழ்க்கையில் பசுமையானதொரு நினைவாக அமைய வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு. அந்த நோக்கத்தை நனவாக்கும் வகையில், பாடசாலை பருவத்தை மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் அர்த்தமுள்ள விதத்திலும் சுதந்திரமாகக் கழிப்பதற்கு ஏற்றவாறு பாடசாலைச் சூழலையும், கற்றல் - கற்பித்தல் செயல்முறையையும் மிகவும் வினைத்திறன் மிக்கதாக மாற்றுவதற்கு நாம் பெரும் முயற்சி எடுத்து வருகின்றோம்.

நீங்கள் சுமந்து வரும் புத்தகப் பையின் சுமையைக் குறைக்க நாம் முயற்சிப்பது நீங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய அறிவு, மனப்பாங்கு மற்றும் திறன்களில் எவ்விதக் குறைபாடும் ஏற்படாத வகையில், எதிர்கால உலகிற்குப் பொருத்தமானவர்களாக உங்களை ஒரு முழுமையான பிரஜையாக உருவாக்குவதற்காகவே ஆகும்.

அன்புக்குரிய பெற்றோர்களே, ஒரு வளமான நாட்டில் உங்கள் பிள்ளைக்கு ஒரு வளமான கல்வியைப் பெற்றுக்கொடுப்பதே எமது நோக்கமாகும். எந்தவொரு பிள்ளையினதும் கல்வி, அவர்களின் பெற்றோரின் பொருளாதார நிலையைக் கொண்டு தீர்மானிக்கப்படக் கூடாது என்பதும், எந்தவொரு பிள்ளையும் கல்வியிலிருந்து புறக்கணிக்கப்படக் கூடாது என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

அதற்கமைய, ஒவ்வொரு பிள்ளைக்கும் சமமான கல்வி உரிமையை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சகல நடவடிக்கைகளையும் ஓர் அரசாங்கம் என்ற ரீதியில் முன்னெடுக்க வேண்டிய பொறுப்பை நாம் ஏற்றுள்ளோம். எமது இந்த நேர்மையான முயற்சியை வெற்றிகொள்வதற்கு உங்கள் அனைவரதும் ஆக்கபூர்வமான கருத்துக்கள் மிகவும் முக்கியமானவை என நாம் கருதுகிறோம்.

நெகிழ்வுத்தன்மை மிக்க சிநேகபூர்வமான அணுகுமுறையுடன் அந்த நேர்மறையான வழிகாட்டல்களையும் கருத்துகளையும் ஏற்றுக்கொண்டு, ஓடி ஆடி விளையாடியவாறு வளரும் உங்கள் பிள்ளைகளின் அனுபவங்களைச் செயல்திறன் மிக்க, அர்த்தமுள்ளவையாக மாற்றி, அவர்களை வகுப்பறையில் மகிழ்ச்சியுடன் வைத்திருக்கும் பொறுப்பை நாம் ஏற்றுள்ளோம்.

அன்புக்குரிய பிள்ளைகளே, தாயின் மடியிலிருந்து விலகி, ஆசிரியர் எனும் பெற்றோரின் அரவணைப்புக்குள் வரும் உங்கள் அனைவரதும் எதிர்காலம் எல்லா விதத்திலும் வெற்றிபெற வேண்டுமென மனதார வாழ்த்துகிறேன் - என்றுள்ளது. (ஐ)

## இரு நாட்களில்...

எதிர்கால நடவடிக்கைகள் குறித்த தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் சங்கத்தின் நிறைவேற்று சபையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. தற்போது முன்னெடுக்கப்பட்டு வரும் தொழில் சங்க நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்கப்படும் எனவும் மருத்துவமனைகளில் கையிருப்பில் இல்லாத மருந்துகளை வெளிநாடுகளில் இருந்து கொள்வனவு செய்வதற்கு அல்லது தனியார் மருந்தகங்களில் வாங்குவதற்கு பரிந்துரைக்கும் மருந்து சீட்டுகளை எழுதும் நடைமுறை தொடர்ந்து நிறுத்தப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

அரசியல் குழுக்களால் ஏற்பாடு செய்யப்படும் எந்தவொரு சுகாதார முகாம்களிலும் மருத்துவர்கள் கலந்துகொள்ள மாட்டார்கள் - என்றும் நேற்று தீர்மானம் எட்டப்பட்டது.

மேலும், தமது கோரிக்கைகள் தொடர்பில் அரசாங்கம் ஆக்கபூர்வமான தலையீட்டை வழங்கத் தவறினால் மருத்துவ சேவைகள் மேலும் பாதிக்கப்படக்கூடிய வகையில் கடும் தீர்மானங்கள் எடுக்கப்படும் - என்றும் அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது. (ஐ)

## ஒட்டுசுட்டானில்...

உயிரிழந்தவர் அதே இடத்தைச் சேர்ந்த நாகையா நாகையா நாகராஜா (வயது 41) என்று அடையாளம் காணப்பட்டுள்ளார்.

நேற்றைய தினம் முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் நடத்தப்பட்ட உடற்கூராய்வு பரிசோதனை அறிக்கையில், தலையில் ஏற்பட்ட கடுமையான காயத்தால் ஏற்பட்ட அதிக இரதப் போக்கால் மரணம் சம்பவித்ததாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

குறித்த நபர் குடும்பத்தை விட்டு பிரிந்து தனியாக வசித்து வந்தார் என்றும் கூறப்படுகிறது. ஒட்டுசுட்டான் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

## புகையிலை...

புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபையின் சட்டத்தை திருத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்றும் இதன்போது தெரிவிக்கப்பட்டது.

உலகில் 104 நாடுகள் தனித்தனி சிகரெட்களை விற்பனை செய்ய தடை விதித்துள்ளன. இந்தச் சட்டத்தை இலங்கையிலும் நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தையும் அதிகாரிகள் இதன்போது வலியுறுத்தினர்.

மேலும், சிகரெட்களுக்கான வரி விதிப்பானது, விலையை தீர்மானித்த பின்னரே மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் என்றும் புகையிலை, மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை குறித்து சுகாதார, ஊடக மற்றும் மகளிர் வலுவூட்டல் தொடர்பான துறைசார் மேற்பார்வை குழுவின் நிறுவன ரீதியான மீளாய்வு கலந்துரையாடலில் தெரிவித்தனர். (ஐ)

## நம்பிக்கையில்லா...

பிரேரணைகள் தொடர்பில் அனைத்து எதிரணிகளுடனும் கலந்துரையாடப்படுகிறது. பாராளுமன்ற உறுப்பினர்களுக்குரிய உரிமைகள் மீறல், பாரபட்சம் உட்பட சில காரணங்களை அடிப்படையாகக் கொண்டே பிரேரணையை முன்வைப்பது குறித்து கலந்துரையாடப்படுகிறது.

எனினும், அரசாங்கத்தின் தேவைக்கேற்ப பிரேரணைகளை கொண்டுவருவதற்கு நாம் தயாரில்லை என்றும் அவர் மேலும் கூறினார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

## இலக்கைக்கான தனது விஜயத்தை நிறைவு செய்த நாணய நிதிய குழு!

கொழும்பு, ஜன. 29

இலங்கைக்கான தலைவர் இவான் பாபகேர்ஜியோ தலைமையிலான சர்வதேச நாணய நிதியத்தின் குழு, டித்வா சூறாவளியால் ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூக தாக்கங்களை மதிப்பீடு செய்வதற்காக மேற்கொண்ட இலங்கை விஜயத்தை நிறைவு செய்துள்ளது.

ஜனவரி 22 அன்று கொழும்பு வந்த நாணய நிதிய குழு, ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய, நிதி மற்றும் தொழிலாளர் அமைச்சர்கள், மத்திய வங்கி ஆளுநர் உள்ளிட்ட உயர் மட்ட அரசாங்க மற்றும் மத்திய வங்கி அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை நடத்தியது.

இந்த விஜயத்தில், இயற்கை பேரழிவுக்குப் பிந்தைய நிதித் தேவைகள், பணவியல் கொள்கை, நிதித் துறை ஸ்திரத்தன்மை மற்றும் விரிவாக்கப்பட்ட நிதி வசதி திட்டத்தின் கீழ் இலங்கையின் மீட்பு முயற்சிகளுக்கு நாணய நிதியம் வழங்கக்கூடிய ஆதரவு குறித்து கவனம் செலுத்தப்பட்டது.

நிதி மற்றும் கடன் நிலைத்தன்மையைப் பாதுகாக்கவும், பொது முதலீட்டு நிர்வாகத்தை வலுப்படுத்தவும், ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக் கூடியவர்களைப் பாதுகாக்க சமூகப் பாதுகாப்பு வலைகளை மேம்படுத்தவும் இலங்கை அதிகாரிகள் உறுதி தெரிவித்துள்ளதாக நாணய நிதிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் அடுத்த மதிப்பாய்விற்காக விரைவில் மீண்டும் நாணய நிதியக் குழு இலங்கை வரவுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## கல்வி சீர்திருத்தங்கள் குறித்து அரசாங்கம் ஏமாற்று வித்தை!

### சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 29

கல்வி சீர்திருத்தங்கள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க மற்றும் அவரது தரப்பினர் பொய்களையும் ஏமாற்று வித்தைகளையும் பரப்புவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கடுமையாகச் சாடியுள்ளார்.

தனது "எக்ஸ்" தளத்தில் பதிவிட்டுள்ள சஜித் பிரேமதாஸ, அரசாங்கத்தின் திறமையின்மை மற்றும் தோல்வியுற்ற கொள்கைகளே 6ஆம் தர கல்வி சீர்திருத்தங்கள் திடீரென நிறுத்தப்படக் காரணம் எனக் குற்றம் சுமத்தியுள்ளார்.

"பிள்ளைகளின் இலவசக் கல்வி உரிமையைப் பாதுகாப்பதற்காகப் போராடும் எங்கள் மீது, அரசாங்கம் இப்போது பழியைப் போட முயல்கிறது" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

"அனைத்து மக்களையும் எல்லா நேரத்திலும் ஏமாற்ற முடியாது என்பதை அநுரகுமார திசாநாயக்க புரிந்து கொள்ள வேண்டும்" என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

முன்னதாக இந்த சீர்திருத்தங்களை எதிர்த்த போதிலும், சரியான முறையில் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு ஒத்துழைப்பு வழங்கத் தயார் எனவும் அவர் சுட்டிக்காட்டினார். (அ)

# வடக்கைப் போன்று வளம் கொண்ட மாகாணம் இலங்கையில் வேறில்லை

### ஆயினும் வறுமையில் எமது இரு மாவட்டங்கள் முன்னிலை என்கிறார் ஆளுநர் வேதநாயகன்!

யாழ்ப்பாணம், ஜன. 29

வடக்கு மாகாணத்தைப் போன்று வளமானதொரு மாகாணம் இலங்கையில் வேறில்லை. ஆனால், வறுமையில் முன்னிலையிலிருப்பது எமது மாகாணத்தின் இரண்டு மாவட்டங்களே. இந்த முரண்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்பது தான் எனது கனவு. 1970களில் மூடிய பொருளாதாரக் கொள்கை இருந்த போது, வடக்கு மாகாணம் பொருளாதாரத்தில் உச்ச நிலையில் இருந்தது. தற்போதைய திறந்த பொருளாதாரச் சூழலில், நாம் மீண்டும் அந்த உன்னத நிலையை அடைய வேண்டுமானால், நேரடி ஏற்றுமதிப் பொருளாதாரமே நமக்கான ஒரே வழியாகும் என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

கிறிஸ்ரலைஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில், பெண்கள் தலைமையிலான கொல்லைப்புறக் கோழி வளர்ப்பு ஊடான நிலைபேறான தன்மை மற்றும் மீளெழுச்சி தொடர்பான "வாய்ப்புகளை உருவாக்குதல்: கற்றலிலிருந்து வருமானம் வரை" எனும் ஆய்வரங்கு மற்றும் விவசாய கள வணிகப் பாடசாலைத் திட்டத்தின் சாதனைகளைக் கொண்டாடும் நிகழ்வு கிளிநொச்சியில் நடைபெற்றது.

நேற்று புதன்கிழமை காலை கிளிநொச்சி அறிவியல் நகரிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்த பின்னர், எமது உற்பத்திப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்குச் சாதகமான சூழல் உருவாகியுள்ளது. எமது சிறு கைத்தொழில் முயற்சியாளர்கள், விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்கள் தமது உற்பத்திகளைத் தரகர்களின்றி நேரடியாக வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான வாய்ப்புகளை நாம் உருவாக்கி வருகின்றோம். யாழ்ப்பாணத்திலிருந்து இதனை வெகுவிரைவில் செயற்படுத்தத் திட்டமிட்டுள்ளோம்.

வடக்கில் விவசாய மற்றும் கடல் சார் உற்பத்திப் பொருட்கள் மூலப் பொருட்களாகவே வெளியேறுகின்றன. அவற்றை இங்கேயே பெறுமதி சேர் உற்பத்திப் பொருட்களாக மாற்றி ஏற்றுமதி செய்வதற்கான தொழிற்சாலைகள் எம்மிடம் இல்லை. இக் குறைபாட்டை நிவர்த்தி செய்யவே, அரசாங்கம் வடக்கில் மூன்று முதலீட்டு வலயங்களை அறிவித்துள்ளது.

கிறிஸ்ரலைஸ் நிறுவனம் ஊடாக உழுந்து, நிலக்கடலை மற்றும் கோழி வளர்ப்பு ஆகிய துறைகள் ஊக்குவிக்கப்படுவது பாராட்டத்தக்கது. இன்று சந்தையில் "பார்ம்" முட்டைகளை விட, எமது "ஊர் முட்டைகளுக்கு" அதிக கேள்வி உள்ளது. எனவே, இத்தகைய சுயதொழில் முயற்சிகள் எமது பொருளாதாரத்தைப் பலப்படுத்தும்.

முன்னைய காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வேறு, சமூகம் வேறு என்ற நிலை இருந்தது. ஆனால், கிளிநொச்சியில் அமைந்த விவசாய பீடமும், பொறியியல் பீடமும்தான் அந்த இடைவெளியைக் குறைத்து, சமூகத்தோடு ஒன்றிணைந்த உணர்வை ஏற்படுத்தின. எதிர்காலத்தில் விவசாய பீடம், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை இணைத்துத் திட்டங்களை முன்னெடுப்போம்.

எமக்கு இப்போது காலநிலை பெரும் சவாலாக மாறியுள்ளது. இரணைமடுக் குளத்தின் கொள்ளளவை விட இரண்டு மடங்கு நீர் கடலுக்குச் செல்கிறது. இந்த மாற்றத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இனிவரும் காலங்களில் இத்தகைய கணிக்க முடியாத காலநிலையே தொடரும் என்பதால், அதற்கு ஏற்றவாறு எமது விவசாய முறைகளை மாற்றியமைத்துக் கொள்ள வேண்டும்-என்றார்.

இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட செயலர் சு.முரளிதரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விவசாய பீடத்தினர், கிறிஸ்ரலைஸ் நிறுவன அதிகாரிகள், அரச அதிகாரிகள் மற்றும் பயனாளிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (அ)

## முன்னாள் அமைச்சர்களிடம் இழப்பீட்டை மீள கோரும் மனு: கோட்டாபய உள்ளிட்டோருக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவு

கொழும்பு, ஜன. 29

2022 ஆம் ஆண்டு மே மாதம் 9 ஆம் திகதி "அரகலய" போராட்டத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற வன்முறைகளின் போது, வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டமைக்காகச் சட்டவிரோதமான முறையில் இழப்பீடு பெற்ற முன்னாள் அமைச்சர்களிடமிருந்து அந்தப் பணத்தை மீளப் பெறுமாறு கோரி அடிப்படை உரிமை மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உள்ளிட்டோருக்கு இது தொடர்பான அறிவித்தல் அனுப்புமாறு உயர் நீதிமன்றம் நேற்று மனுதாரர் தரப்பு சட்டத்தரணிகளுக்குப் பணிப்புரை விடுத்துள்ளது.

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஓய்வு பெற்ற மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன, முன்னாள் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன மற்றும் முன்னாள் கடற்படைத் தளபதி நிஷாந்த உலுக்கேதன்ன ஆகியோருக்கு இந்த அறிவித்தலை அனுப்ப நடவடிக்கை எடுக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னாள் அமைச்சர்களான பிரசன்ன ரணதுங்க, டிரான் அலஸ் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் ஜகத் அல்விஸ் ஆகியோருக்கும் இந்த வழக்கிற்குரிய அறிவித்தலை வழங்குமாறு உயர் நீதிமன்றம் தனது உத்தரவில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ)

# தொழிற்சங்க மிரட்டல்களுக்கு நாங்கள் அடிபணிய மாட்டோம்

### அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, ஜன. 29

எந்தவொரு தொழிற்சங்கத்தினதும் அச்சுறுத்தல்கள் அல்லது மிரட்டல்களுக்கு அடிபணிந்து அரசாங்கம் தீர்மானங்களை எடுக்கப்போவதில்லை என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

சுகாதார முகாமைத்துவ உதவியாளர் பதவிக்குப் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட 213 பேருக்கான நியமனக் கடிதங்களை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

சுகாதார சேவையில் நிலவும் மனிதவள பற்றாக்குறையை நிவர்த்தி செய்து, மக்களுக்குத் தரமான சேவையை வழங்குவதே அரசாங்கத்தின் முக்கிய இலக்காகும்.

வெளிநாடுகளில் அதிக வேதனம் கிடைப்பதாகக் கூறிக்கொண்டு, தாக மிரட்டி வேதன உயர்வுகளைக் கோரும் எந்தவொரு தரப்பினரின் கோரிக்கைகளுக்கும் அரசாங்கம் அடிபணியப்போவதில்லை என்று அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, சுகாதார அமைச்சர் பேச்சுவார்த்தைக்கு முன்வராது மருத்துவர்கள், மீது சேறு பூச முயல்வதால், எதிர்வரும் முதலாம் திகதிக்குப் பின்னர் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்தவுள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

## இதுவரையான காலப்பகுதியில் 220,000 சுற்றுலாவிகள் வருகை!

கொழும்பு, ஜன. 29

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 220,000 பேர் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அதிகார சபை தெரிவித்துள்ளது. அதன்படி, 223,645 வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

சுற்றுலாப் பயணிகளின் வருகையில் இந்தியா முதலிடத்தைப் பிடித்துள்ளது.

நாடுகளின் அடிப்படையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை-

இந்தியா - 41,603
ஐக்கிய இராச்சியம் - 23,329
ரஷ்யா - 22,876
ஜேர்மனி - 14,431
பிரான்ஸ் - 10,746

கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 252,761 சுற்றுலாப் பயணிகள் வருகை தந்திருந்தனர்.

2025 ஆம் ஆண்டு மொத்தம் 2,362,521 வெளிநாட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 29.01.2026 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.